திருத்தப்பட்டது **

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 131** **நாள்: 14.06.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில், சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைப்பதற்கான தேர்தல் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலையோர வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துவதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழு அமைப்பதற்கான தேர்தலை சுமூகமாகவும் அமைதியாகவும் நடத்துவதற்காக தேர்தல் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 13.06.2025 அன்று ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள அம்மா மாளிகை கலந்தாய்வுக் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆணையாளர் அவர்கள் வேட்பு **மனு வழங்கல் தொடங்கும் நாளான 16.06.2025 அன்று முதல் 26.06.2025 **அன்று நடைபெறவுள்ள வாக்குப்பதிவு நாள் மற்றும் 27.06.2025 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கை முடிவு வரை காவல்துறையின் மூலம் போதிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

மேலும், தேர்தலில் வாக்குப்பதிவு மையங்கள், வாக்கு எண்ணிக்கை மையங்கள் ஆகிய இடங்களில் குடிநீர், கழிவறை உட்பட போதிய அடிப்படை வசதிகள் சிறப்பாக அமைக்கப்பட வேண்டும். மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக வாக்குப்பதிவு மையங்களில் சாய்வுமேடை (Ramp) மற்றும் சக்கர நாற்காலி (Wheel Chair) அமைக்கப்பட வேண்டும். வாக்காளர்கள் எந்த மையத்தில் தன்னுடைய வாக்கினைப் பதிவு செய்ய வேண்டும் என்பதை எளிதில் அறிந்துகொள்ள ஒவ்வொரு மையத்திலும் உதவி மையம் (Help Desk) ஏற்படுத்த வேண்டும். வாக்குப்பதிவு மையங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களில் கண்காணிப்புக் கேமராக்கள் நிறுவி, நிகழ்வுகள் ஒளிப்பதிவு செய்ய வேண்டும் என சம்மந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

முக்கியமாக வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள எந்தவொரு சாலையோர வியாபாரியும், தேர்தலில் வாக்குப்பதிவு செய்யும் முன்பு பெருநகர சென்னை மாநகராட்சியால் 2023ம் ஆண்டில் வழங்கப்பட்ட சாலையோர வியாபாரிகள் அடையாள அட்டையை காண்பித்தாலோ அல்லது புதியதாக சிப் பொருத்திய அடையாள அட்டையை காண்பித்தாலோ அல்லது **அடையாள அட்டை இல்லாதவர்கள் தன் பெயர் மற்றும் முகவரிக்கான ஆதார் அடையாள அட்டை / ஓட்டுநர் உரிமம் / வங்கிக் கணக்குப் புத்தகம் / குடும்ப அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு அசல் ஆவணத்தை காண்பித்து வாக்களிக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் ஆணையாளர் அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஒரு வாக்காளர், பதிவு செய்யப்பட்ட மண்டலத்திலிருந்து மற்றொரு மண்டலத்தில் போட்டியிட விரும்பினால், குறிப்பிட்ட அந்த மண்டலத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு சாலையோர வியாபாரி முன்மொழிபவராகவும், மற்றொரு சாலையோர வியாபாரி வழிமொழிபவராகவும் இருந்தால் மட்டுமே

அவருடைய வேட்பு மனு ஏற்கப்படும். எனினும், ஒரு சாலையோர வியாபாரி ஏதேனும் ஒரு மண்டலத்தில் ஒரு பிரிவில் மட்டுமே போட்டியிட முடியும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை காவல் துறை கூடுதல் ஆணையர் (வடக்கு) திரு.பிரவேஷ்குமார், இ.கா.ப., வட்டார துணை ஆணையர்கள் திரு.எம்.பி.அமித்,இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), பள்ளிக்கரணை காவல் துறை துணை ஆணையர் திரு.ஏ.சி.கார்த்திகேயன், போக்குவரத்து காவல்துறை துணை ஆணையர் திரு.சி.சங்கு, தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகள், **மாநகர வருவாய் அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், கூடுதல் நல அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**